
Saint
Rupert

மார்ச் 29

## புனித ருப்பெர்ட் (718)

இவர் சில தோழர்களோடு ஒரு சிற்றரசரை அணுகினார். அவரது அனுமதியின்றி வேதம் போதிக்கக் கூடாது. அரசர் இவரை வரவேற்றார். இவரது சொற்களுக்கு செவி கொடுத்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். அரசரது நன்மாதிரியைப் பின்பற்றி பிரபுக்களும் சாதாரண குடி மக்களும் வேதத்தில் சேர்ந்தார்கள். அவிசுவாசிகளின் ஆலயங்கள் கிறிஸ்தவ கோயில்களாக மாற்றப்பட்டன. புதிய கோயில்களும் கட்டப்பட்டது. அரசர் இவருக்கு ஓர் ஊரைக் கொடுத்தார். அங்கு இவர் ஒரு கோயிலும் சந்நியாசிகளின் மடமும், பள்ளிக்கூடமும் கட்டினார். இவரால் மனந்திரும்பிய மக்கள் நாகரீகமுள்ளவர்களாக வாழும்படியாக இங்கு பெரும் முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றார். அவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கவும் வழி வகுத்தார்.

**சிந்தனை:**

மனந்திரும்பிய மக்களை இறுதி வரை காத்து அவர்கள் வளமுடன் வாழ செய்வது தலைவர்களின் கடமை.

**செபம்:**

ஆண்டவரே, ஆர்வம் நிறைந்த தலைவர்களை எங்களுக்குத் தாரும்.




(C) 2012 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org